# போதைப் பழக்கத்திற்குட்பட்டோருக்கு அதிலிருந்து விடுபடுவதற்கு உதவி செய்வதில் இஸ்லாமிய உளவளத்துணையின் பங்கு : 2019ஆம் ஆண்டு கல்முனை நீதவான் நீதிமன்ற சமுதாய சீர்திருத்த கட்டளையாளர்களை மையப்படுத்திய ஆய்வு

M.I. Fathima Sheefa[1], MSM. Safreen[2]

[1]Department of Islamic Studies. [2]Community Correction Officer. [1]Faculty of Islamic Studies and Arabic Language. South Eastern University of Sri Lanka. [2]Magistrate Court Kalmuani
breez1988@gmail.com

**ஆய்வுச் சுருக்கம் :** சமூகங்களை கேள்விக் குறியாக்கக் கூடிய உளச் சமூகப் பிரச்சினைகளுள் ஒன்றாக போதைப் பழக்கம் காணப்படுகின்றது. நேரடியாகவும் மறைமுகமாகவும் உலகளவில் போதைப் பாவனையால் வருடா வருடம் 11.8 மக்கள் இறக்கின்றனர். புகைத்தல் மற்றும் மது பாவனை போன்ற போதைப் பாவனையால் வருடா வருடம் உலகளவில் 350,000 மக்கள் போதையளவு அதிகரித்ததன் (Overdoses) விளைவாக இறக்கின்றனர். இப்பாவனையால் 50 வயதுக்குக் குறைந்தவர்களே அதிகம் இறப்பைத் தழுவுகின்றனர் (Ritchie & Roser, 2019). மேலும், 2019 ஆம் ஆண்டு 89,321 போதைப் பொருட்களுடன் தொடர்பான குற்றச் செயல் கைதுகள் இடம் பெற்றுள்ளதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் 2019ஆம் ஆண்டறிக்கை தெரிவிக்கின்றது. இவ்வாறு போதைப் பாவனையும் அதனால் உருவாகும் குற்றச் செயல்களும் பரவலாக அதிகரித்த வண்ணமே உள்ளது. இதனைத் தடுக்கும் முயற்சியில் ஒரு பக்கம் அரசாங்கம் ஈடுபட்டாலும் மறுபுறம் ஏற்றுமதி, இறக்குமதி என்ற அடிப்படையில் பொருளாதார அபிவிருத்திக்கு உதவும் சக்தியாகவும் இது மாறியுள்ளது.

போதைப் பொருள் பாவனை என்பது தனிநபர் பிரச்சினையாக ஆரம்பித்து அதன் விளைவுகள் குடும்பப் பிரச்சினை, சமூகப் பிரச்சினை என விரிவடைந்து உளச்சமூகப் பிரச்சினையாக உருவெடுக்கின்றது. இப்பாவனையால் ஏற்படக் கூடிய உளப் பிரச்சினைகளை கட்டுப்படுத்தக் கூடிய அல்லது குறைப்பதற்கு உதவி செய்யக் கூடிய ஒரு துறையாக உளவளத்துணையினைக் குறிப்பிடலாம். பொதுவாக உளவளத்துணை என்பது இன்று மேற்குமயப்படுத்தப்பட்டிருப்பதால் அதனை முஸ்லிம்களுக்கு மத்தியில் நடைமுறைப்படுத்தும் போது பல நம்பிக்கை சார் இடர்பாடுகள் ஏற்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் தான் முஸ்லிம்களுக்கு வழங்கப்படும் உளவளத்துணை என்பது இஸ்லாத்தின் நம்பிக்கைப் பெறுமானங்கள், வரையறைகள், கலாசார நடைமுறைகள், விழுமியங்கள் போன்றவற்றை பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய வகையில் அமைய வேண்டும் என வாதங்கள் எழுந்த வண்ணம் உள்ளன. இன்றைய உளவளத்துணையாளர்களுள் அநேகமானவர்கள் மேற்குலக ஐரோப்பிய, அமேரிக்க சிந்தனைகளால் தாக்கமுற்றவர்களாக காணப்படுவதனால் தங்களிடம் வரக் கூடிய போதைப் பழக்கத்திற்கு உட்பட்ட சேவைநாடிகள் விடயத்தில் மிகச் சரியான முறையில் தலையீட்டை செலுத்தத் தவறுகின்றனர். வெறுமனே மேற்கின் உளவளத்துணை முறைமை, நுட்பங்களைப் பயன்படுத்தி இவர்களுக்கு உளவளத்துணை

வழங்கும் போது குறித்த முஸ்லிம் சேவைநாடி தான் அல்லாஹ் தடுத்த பெரும் பாவம் ஒன்றைச் செய்த குற்ற உணர்வுடன் வந்திருப்பதை பற்றி சிந்திக்காது உதவி வழங்குகின்றனர். அதனால் சேவைநாடிகளின் உடலியல் தாக்கங்களுக்கு சரியாக சிகிச்சையளிக்க முடிந்தாலும் உளவியல் மற்றும் ஆத்மீக ரீதியில் அவர்களுக்கு பலன்குறைவாகவே உள்ளது. இன்னும் அந்தக் குற்ற உணர்வும், மீண்டும் போதைப் பழக்கத்திற்கு ஆளாகமாட்டார் என்ற உத்தரவாதமின்மையும் தொடர்ந்து பயணிக்கின்றது.

இந்த பின்னணியில் தான் குறிப்பாக இஸ்லாமிய உளவளத்துணை தேர்ந்தெடுக்கப்பட்டு போதைப் பழக்கத்திற்குட்பட்டோருக்கு உதவி செய்வதில் அதன் பங்கு எவ்வாறுள்ளது என நடைமுறையில் பிரயோகித்து மேற்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு 2019ஆம் ஆண்டு கல்முனை நீதவான் நீதிமன்ற சமுதாய சீர்திருத்த கட்டளையாளர்களில் முஸ்லிம்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு இஸ்லாமிய அடிப்படையிலான உளவளத்துணை வழங்கப்பட்டு பெறுபேறுகள் பெறப்பட்டன. போதைப்பழக்கத்திற்கு உட்பட்ட முஸ்லிம் சேவைநாடிகளுக்கு உதவுவதில் இஸ்லாமிய உளவளத்துணையின் வகிபங்கு என்ன? என்ற கேள்விக்கு விடைகாண்பதற்காக இவ் ஆய்வு நோக்கமாக போதைப்பழக்கத்திற்கு உட்பட்ட முஸ்லிம் சேவைநாடிகளுக்கு உதவுவதில் இஸ்லாமிய உளவளத்துணையின் வகிபங்கினை கண்டறிவதை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது பண்பு ரீதியான ஆய்வாகும். இதில் முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள் :** உளவளத்துணை, இஸ்லாமிய உளவளத்துணை, போதைப் பழக்கம், சிகிச்சை

## ஆய்வு அறிமுகம்

போதைப் பொருள் பாவனை என்பது முழு மனித சமூதாயத்தையும் வழிகேட்டிற்குள் இட்டுச் சென்று கொண்டிருக்கும் காலகட்டம் இது. ஒரு புறம் இதன் எதிர்மறையான விளைவுகள் பற்றி உலகளாவிய ரீதியில் விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டு கொண்டிருப்பதுடன் மறு புறம் இதன் சந்தைப்படுத்தல்களும் ஓயவில்லை. எனினும் அரச மட்டங்களிலிருந்து அதனை இல்லாதொழிக்கும் கைங்கரியங்களும் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டுதான் உள்ளன (Fuzin, 2019). கி.பி. 7ஆம் நூற்றாண்டுகளில் மதீனா சமூகத்தில் இஸ்லாத்தை தழுவிய ஆரம்ப கால அரபிகளுக்கு மத்தியில் இழையோடிக் காணப்பட்ட மதுப் பழக்கத்தினை இல்லாதொழிப்பதில் இஸ்லாம் அளப் பெரும் பங்காற்றியது வரலாறுகாண் உணமையாகும். அவர்கள் மதுவுக்கு மிக மோசமாக அடிமையாகி இருந்ததோடு அவர்களது அன்றாட வாழ்வியலோடு பிணைந்த இயல்பான ஒன்றாகவும் இருந்த இப்பழக்கத்தை விடுத்து ஈன்மீக, சமூக, உளவியல் ரீதியாக செயற்றிறன் மிக்க மாற்றத்தை இஸ்லாம் ஏற்படுத்தியது. 20ஆம் நூற்றண்டில் அமெரிக்கா மது அருந்துவதை தடுக்க நிறைவேற்றிய சட்டங்களோ, எடுக்கப்பட்ட முயற்சிகளோ எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது தோல்வியைத் தழுவின. ஆனால் மதுப் பாவனையால் சிறுநீரக பாதிப்பு ஏற்பட்டுவிடும் என்ற அறிவோ, மதுவின்

பாதிப்பை உடலிலிருந்து நீக்குவதற்கான முறைமைகளோ, நடத்தைசார் விளைவுகளை சீராக்க மருத்துவமனைகளோ, அதற்கான மருத்துவ அறிவோ இன்றிய காலகட்டத்தில் மதுப் பழக்கத்தை முற்றுமுழுதாக விட்டுவிடுவதில் பாரிய பங்காற்றியது அவர்களது ஈமானியத் தாக்கமே (பத்ரி, 2019).

தற்காலத்தில் மக்கள் மத்தியில் பரிணமிக்கக் கூடிய உளவியல், உளச் சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவும் ஒரு துறையாக உளவளத்துணை எனும் துறை உருவாகி வளர்ச்சி கண்டுள்ளது. உள ரீதியாக பிரச்சினைக்குட்பட்டவர்களுக்கு அப்பிரச்சினையிலிருந்த அவராகவே விடுபட வழங்கப்படும் உதவியே உளவளத்துணை ஆகும். இது தனிநபர் உளவளத்துணை, குழு உளவளத்துணை, குடும்ப உளவளத்துணை என்ற பரப்பில் காணப்படுவதோடு தேவையான துறைகளில், குறிப்பாக உளச்சமூகப் பிரச்சினைக்குரிய விடயங்களில் துறைசார் கவனம் எடுக்கின்றது. அவற்றில், போதைக்கு அடிமையானேருக்கான உளவளத்துணை, முதியோருக்கான உளவளத்துணை, நாட்பட்ட நோய்க்குள்ளானோருக்கான உளவளத்துணை, தற்கொலை முயற்சியில் ஈடுபட்டோருக்கான உளவளத்துணை போன்றவற்றை அடையாளப்படுத்தலாம் (ஜெயசிங்க, 2014). இன்று இவ் உளவளத்துணையானது மேற்கு மயப்படுத்தப்பட்ட பின்னணியில் முறைப்படுத்தப்பட்டிருப்பதால் அதனை முஸ்லிம்கள் மத்தியில் நடைமுறைப்படுத்துகின்ற பொழுது சில நடைமுறைச் சிக்கல்கள், ஆத்மீக ரீதியான திருப்தியின்மை போன்ற விடயங்கள் அரங்கேறுகின்றன. இப்பின்னணியிலேயே முஸ்லிம்களுக்கு மிகச் சிறந்ததாக இஸ்லாமிய உளவளத்துணை அடையாழப்படுத்தப்படுகின்றது. இது தொடர்பாக முனீதா சந்தர்வதி (2013) தனது ஆய்வில், அல்குர்ஆன், ஸுன்னாவைப் பயன்படுத்தி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நுட்பங்களையும், கருவிகளையும் அல்லாஹ் எமக்குக் கொடுத்திருக்கின்றான். இதைத்தான் இஸ்லாமிய உளவளத்துணை முற்காலங்களிலும் தற்காலங்களிலும் பயன்படுத்துகின்றது. உளச்சுகாதாரப் பிரச்சினைகளுக்கு மார்க்க வழிகாட்டல்கள் மூலம் இது விடைகாண்கிறது என்கின்றார்.

உளவளத்துணை மற்றும் உளவியல் மருத்துவங்களை மேற்கொள்ளக் கூடியவர்களுள் அநேகமானவர்கள் மேற்குலக ஐரோப்பிய, அமேரிக்க சிந்தனைகளால் தாக்கமுற்றவர்கள் (சுந்தரம் மற்றும் சிவயோகம், 2014). போதைக்கு அடிமையானவர்களின் ஆன்மாவிலும் உள்ளத்திலும் ஈமான் என்ற தூண்டற் காரணி ஏற்படுத்தும் தாக்கம் பற்றி அவர்கள் அறிந்திருப்பது குறைவு. தம்மிடம் வந்திருக்கும் சேவைநாடி அல்லாஹ் தடுத்த பெரும் பாவம் ஒன்றைச் செய்த குற்ற உணர்வுடன் வந்திருக்கிறார் என அவர்களில் பலர் உணர்வதில்லை. அந்த சேவைநாடிகளது மனச் சுமை இறக்கி வைக்கப்பட வேண்டும். அல்லாஹ்வின் அருளிலும் மன்னிப்பிலும் நம்பிக்கையிளந்துள்ள அவருக்கு சரியாகக் கைகொடுக்க வேண்டும். அவரது உள்ளத்தில் நேர்மறையான ஒரு மீழ் சிந்தனை தோற்றுவிக்கப்பட வேண்டும். அவரது ஆன்மாவும் இறையச்சமும் எதிர்கொள்ளும் திறனும் பலப்படுத்தப்பட வேண்டும். நம்பிக்கையின்மையும் போதைக்கு அடிமையாக்கப்பட்ட நிலையும் படிப்படியாகக் களையப்பட்டு உளச்சுகாதார நல்லிருப்பை நோக்கி அவர் வழிகாட்டப்பட வேண்டும். இஸ்லாமியம் அல்லாத பொதுவான நடைமுறைகளில் போதைப் பொருளின் அல்லது மதுவின் நச்சுத் தன்மையை உடலிலிருந்து நீக்கி அதனை தூய்மைப்படுத்துவார்கள். அல்லது

போதையை கைவிட்டதால் உடலில் ஏற்படும் பக்க விளைவுகளை மாத்திரைகளைக் கொண்டு சரி செய்ய முயல்வார்கள். ஆனால், குறித்த நபர் மீளவும் மதுவை நோக்கிச் செல்லமாட்டார் என்பதற்கு உத்தரவாதமில்லை (பத்ரி, 2019)

இப்பின்னணியில் போதைப் பழக்கத்திற்கு ஆளானவர்களை உளவியல் ரீதியாகவும், ஆத்மீக ரீதியாகவும் சரியாகக் கட்டியெழுப்பக் கூடிய பொறுப்பினை இஸ்லாமிய உளவளத்துணை தாங்கி நிற்கின்றது. ஆய்வுப் பிரதேசமான கல்முனை நீதவான் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட சமுதாய சீர்திருத்த கட்டளையாளர்களில் முஸ்லிம்களுக்கு இந்த அடிப்படையில் உளவளத்துணை வழங்கப்பட்டு அவர்களின் உளநல நல்லிருப்பு பாதுகாக்கப்பட்டதுடன் அவர்கள் மீண்டும் போதைப் பழக்கத்தின்பால் மீழவில்லை என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. நீதிமன்றங்களுக்கு கொண்டுவரப்படும் சிறு குற்றம் செய்தவர்களை மீண்டும் மீண்டும் அவர்கள் குற்றம் செய்யாமல் சிறைத் தண்டனையோ அல்லது தண்டப்பணமோ விதிக்காது சமுதாய சீர்திருத்தக் கட்டளை என்ற ஒன்றைப் பிறப்பிப்பதன் மூலம் அவர்களுக்கு உளவளத்துணை வழங்குதல், தொழில் வழிகாட்டல் ஆலோசனை வழங்குதல் போன்ற வழிமுறைகள் ஊடாக மீண்டும் அவர்கள் குற்றச் செயலின்பால் மீளாது வழிகாட்டப்படும். இலங்கையின் 1999 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க சமுதாம்சார் சீர்திருத்த கட்டளைச் சட்டமானது 20 உட் பிரிவுகளைக் கொண்டமைந்த ஒன்றாக காணப்படுகிறது. இச்சட்டத்தின் ஊடாக சிறைத்தண்டனைத் தீர்ப்புக்குப் பதிலாக சமுதாய சீர்திருத்தக் கட்ளைகளை பிறப்பிப்பதன் ஊடாக குற்றவாளிகளை சீர்திருத்துகின்ற பிரதான செயற்பாடு இடம்பெற்று வருகின்றது. அந்த வகையில் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் இயங்குகின்ற கொழும்பை தலைமையகமாகக் கொண்ட சமுதாயம்சார் சீர்திருத்தத் திணைக்களமே இப்பணியினைச் செய்கின்றது. இலங்யையிலே இருக்கின்ற அனைத்து நீதிவான் நீதிமன்றங்களிலும் சமுதாயம்சார் சீர்திருத்தத் திணைக்களத்தினைப் பிரதிபலிக்கின்ற ஒரு சமுதாய சீர்திரத்த உத்தியோகத்தரும், அவருடன் உதவியாளராக சமுதாய சீர்திரத்த வேலைப் பரிசோதகரும் காணப்படுவார். அதனோடு இணைந்ததான மேலதிக நடவடிக்கைகளுக்காக ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் ஒவ்வொரு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சகிதம் நியமிக்கப்பட்டுள்ளனர். இக்கட்டமைப்பிலேயே நீதிவான் நீதிமன்றங்களில் சமுதாய சீர்திருத்த பிராந்திய காரியாலயங்கள் இயங்கி வருகின்றன.

**ஆய்வு பிரச்சினை**

இன்றைய உளவளத்துணையாளர்களுள் அநேகமானவர்கள் மேற்குலக ஐரோப்பிய, அமேரிக்க சிந்தனைகளால் தாக்கமுற்றவர்களாக காணப்படுவதனால் தங்களிடம் வரக் கூடிய போதைப் பழக்கத்திற்கு உட்பட்ட சேவைநாடிகள் விடயத்தில் மிகச் சரியான முறையில் தலையீட்டை செலுத்தத் தவறுகின்றனர். வெறுமனே மேற்கின் உளவளத்துணை முறைமை, நுட்பங்களைப் பயன்படுத்தி இவர்களுக்கு உளவளத்துணை வழங்கும் போது குறித்த முஸ்லிம் சேவைநாடி தான் அல்லாஹ் தடுத்த பெரும் பாவம் ஒன்றைச் செய்த குற்ற உணர்வுடன் வந்திருப்பதை பற்றி சிந்திக்காது உதவி வழங்குகின்றனர். அதனால் சேவைநாடிகளின் உடலியல் தாக்கங்களுக்கு சரியாக சிகிச்சையளிக்க முடிந்தாலும் உளவியல் மற்றும் ஆத்மீக ரீதியில் அவர்களுக்கு பலன்குறைவாகவே உள்ளது. இன்னும்

அந்தக் குற்ற உணர்வும், மீண்டும் போதைப் பழக்கத்திற்கு ஆளாகமாட்டார் என்ற உத்தரவாதமின்மையும் தொடர்ந்து பயணிக்கின்றது.

**ஆய்வு நோக்கம்**

போதைப்பழக்கத்திற்கு உட்பட்ட முஸ்லிம் சேவைநாடிகளுக்கு உதவுவதில் இஸ்லாமிய உளவளத்துணையின் வகிபங்கினை கண்டறிதல்.

**ஆய்வு வினா**

போதைப்பழக்கத்திற்கு உட்பட்ட முஸ்லிம் சேவைநாடிகளுக்கு உதவுவதில் இஸ்லாமிய உளவளத்துணையின் வகிபங்கு என்ன?

**ஆய்வு முறையியல்**

இது பண்பு ரீதியான ஆய்வாகும். இதில் ஆய்வுப் பிரதேசமான கல்முனை நீதவான் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட 2019ஆம் ஆண்டு அடையாளப்படுத்தப்பட்ட சமுதாய சீர்திருத்த கட்டளையாளர்களில் 33பேர் முஸ்லிம்கள் காணப்பட்டனர். இவர்களை அவதானிப்பு மற்றும் பங்குபற்றுதல் செய்து அதன் மூலம் முதலாம் நிலைத் தரவுகள் பெறப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவுகளாக இது தொடர்பான நூல்கள், ஏற்கனவே வெளியிடப்பட்ட ஆய்வுகளின் உட்பரிமானங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் மற்றும் இணையதளம் என்பன மீழாய்வுக்குட்படுத்தப்பட்டு விபரண விபரிப்பு முறை மூலம் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**இலக்கிய மீளாய்வுகள்**

இவ்வாய்வினை செய்து முடிப்பதற்கு பல இலக்கிய மூலங்கள் மீழாய்வுக்குட்படுத்தப்பட்டன. அவை பற்றி நோக்கின், அருழ்மொழி (2017) எழுதிய *கற்பித்தலுக்கான உளவியல்* எனும் நூலானது இவ்வாய்வு தொடர்பான பல உளவியல், நடத்தைசார் விடயங்களை மீழாய்வுக்குட்படுத்த முடியுமாக அமைந்தது. இது உளவியலின் ஆரம்பம், அறிமுகம், கோட்பாடுகள் என பல விடங்களை பரவலாக உள்ளடக்கியுள்ளது. அதேபோல, மாலிக் பத்ரி (2017) எழுதிய *Hikmathul Islam fi Thahreemil Khamr, dhirasa nafsiyyah ijthimaaiyyah* எனும் அரபு நூலானது போதைப் பொருள் தொடர்பாகவும் அதன் தடுப்பு, போதைக்கு அடிமையானோரை அதிலிருந்து விடுவித்தல் போன்ற பல விடயங்களை உளவியல் மற்றும் இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் யதார்த்தமாகவும் தெளிவாகவும் விளக்குகின்றது. தேவையான இடங்களில் விடயக்கற்றையும் பயன்படுத்தப்பட்டு அதன் நடைமுறைகளும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. Hannah Ritchie, Max Roser (2019) எழுதிய Drug Use எனும் கட்டுரையானது போதைப் பொருள் பாவனைகள் அதன் விகிதாசாரங்கள் என பல விடயங்களை உள்ளடக்கி எழுதப்பட்டுள்ளது. மேலும், ரிட்லி ஜெயசிங்க (2010) எழுதிய *உளவியல் சார் உளவளத்துணை அணுகுமுறைகள்* எனும் நுலானது உளவளத்துணை தொடர்பாகவும் அதில் பயன்படுத்தப்படும் அணுகுமுறைகள் தொடர்பாகவும் மற்றும் உளவளத்துணையின் வகைகள், பண்புகள், திறன்கள் போன்ற பல விடயங்கள் தேவையான

விடயக்கற்கைகள் மூலம் தெளிவுபடுத்துகின்றது. அவ்வாறே தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் 2019 ஆம் ஆண்டு போதைப் பொருள் பாவனை தொடர்பான அறிக்கையானது பாவனைகளக், அதன் மட்டங்கள், பாதிக்கப்பட்ட விபரம் என பலவற்றையும் விகிதாசார அமைப்பில் எடுத்துக்காட்டுகின்றது. தயா சோமசுந்தரம் (2014) எழுதிய *சீர்மிய உளவியல்* எனும் நூலானது இவ்வாய்வுக்குத் தேவையான பல உளவளத்துணை சார் விடயங்களை தாங்கி நிற்கின்றது. இவற்றை மீழாய்வு செய்து இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**கலந்துரையாடல்கள்**

சமயங்களைப் பின்பற்றக் கூடிய மக்களைப் பொறுத்தவரை இயல்பிலேயே சட்டம், விதிமுறைகளுக்கு அவர்கள் கட்டுப்படுவதையும் தாண்டி சமய நம்பிக்கைகள், போதனைகளுக்கு பெரிதும் கட்டுப்படக் கூடியவர்களாகவும், அவை அவர்களில் பெரிதும் தாக்கம் செலுத்தக் கூடியதாகவும் உள்ளது. 1987 ஆம் ஆண்டு அம்மான் நகரில் இடம்பெற்ற மனநல மருத்துவர்களின் 3ஆவது மாநாட்டில் தென்கிழக்காசிய நாடான புரூணையில் போதை மற்றும் மது பாவனைக்கு அடிமையானவர்களுக்கு தனியாகவும் கூட்டாகவும் சிகிச்சை செய்கின்ற ஐரோப்பிய மனநல மருத்துவர் ஒருவர் முன்வைத்த திட்டங்கள் கவர்ச்சியாக அமைந்திருந்தன. மதுவுக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை செய்வதில் பல இஸ்லாமிய செயற்பாடுகளையும் அவர் இணைத்திருந்தார். மதுவுக்கு அடிமையானவர்களை அவர் சுபஹ் தொழச் செய்வதிலிருந்து ஆரம்பிப்பார். ஏனைய துறைசார் மார்க்க அறிஞர்களின் மாலை நேர நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளச் செய்வார். இஸ்லாமிய நிலையங்களில் உள்ள புத்தகங்களை வாசிக்க வைப்பார். அத்தோடு அவரது சிறப்புத் துறையான மின்சாரத் தூண்டல் (Electro Stimulation) சிகிச்சையையும் வழங்குவார். இவ்வாறு சமயம் சார் விடயங்களை இணைத்துக் கொண்டமைக்கான காரணத்தை அரபு உள மருத்துவர்கள் அவரிடம் கேட்ட போது, ''நான் ஒரு முஸ்லிம் அல்ல. ஆனால் முஸ்லிமுடைய ஆளுமையைத் தீர்மானிப்பதில் இஸ்லாத்துக்குப் பங்குண்டு எனக் கருதுகின்றேன். எனது கள ஆய்வுகளில் இது நல்ல பல விளைவுகளை தந்துள்ளமையை நான் உறுதிப்படுத்துகின்றேன். இதனைத் தான் நாம் செய்ய வேண்டும்'' எனக் குறிப்பிட்டார் (பத்ரி, 2019).

இவ்வாறான நடைமுறைகள் தான் தெரிவு செய்யப்பட்ட ஆய்வுப் பிரதேசத்திலும் இடம் பெறுகின்றது என்பது பகுப்பாய்வில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. ஆரம்பமாக சேவைநாடியை ஒருநிலைப் படுத்த மூச்சுப் பயிற்சி (Relaxation) வழங்கப்படும். இச் செயன்முறையின் போது இவர்களின் ஒவ்வொரு செயற்பாட்டுடனும் ஒரு இஸ்லாமிய நினைவூட்டல் கொடுக்கப்படும். அதாவது, அவர்கள் மெதுவாக சுவாசக்காற்றை உள்ளெடுக்கும் போதும், அதனை கொஞ்ச நேரம் உள்ளே பற்றிப் பிடித்து வைத்திருக்கும் போதும், மெதுவாக வெளியிடும் போதும் 'ஸுபஹானல்லாஹ்' 'அல்ஹம்துலில்லாஹ்' போன்ற இறை நினைவூட்டல்கள் கொடுக்கப்பட்டு அப்பயிற்சி ஆத்மீகத்தோடு இணைந்து வழிநடாத்தப்படும். எகிப்தைச் சேர்ந்த பிரபல் உள மருத்துவரான கலாநிதி ஜமால் மாழி என்பவரும் இதே அணுகுமுறையை கையாண்டுள்ளார். எகிப்தின் கெய்ரோவைச் சேர்ந்த போதைக்கு அடிமையானோரை சிகிச்சை


ISBN 978-624-5736-14-0

செய்யும் போது அவர்களது சமய உணர்வை அவர் பயன்படுத்திக் கொண்டார். அதனூடாக ஆரோக்கிய வாழ்வை நோக்கி அவர்களுக்கு வழி காட்டினார் (பத்ரி, 2019).

போதைப் பொருள் பாவனை தொடர்பான யதார்த்த பூர்வமான உளவியல், மருத்துவ உண்மைகளை உளக்கற்கை (Psycho Education) மூலம் வழங்கும் அதேவேளை அது தொடர்பான இஸ்லாத்தின் நிலைப்பாடுகளும் தெளிவு படுத்தப்படுகின்றன. இங்கே போதைப் பாவனையால் உடலில் ஏற்படக் கூடிய தாக்கங்கள், உபாதைகள், குடும்ப வாழ்வில் இணையும் போது ஏற்படக் கூடிய இடைஞ்சல்கள் போன்ற விடயங்களும், உளவியல் ரீதியான விடயங்களும் அவை மனித உணர்வுகளில் எவ்வாறான எதிர்மறைத் தாக்கங்களை ஏற்படுத்தவல்லவை என்பது பற்றியும் உளவளத்துணையாளரால் யதார்த்த பூர்வமான முறையில் தெளிவுபடுத்தப்படுகின்றது. இன்னும், இது பற்றி இஸ்லாம் என்ன நிலைப்பாட்டை கொண்டுள்ளது என்பதை ஆத்மீகத்தோடு இணைத்து சேவைநாடிக்கு வழங்கப்படுகின்றது. இதில் ஆரம்ப கால முஸ்லிம்கள் போதையை எவ்வாறு பயன்படுத்தினார்கள், பின்னர் தடை செய்யப்பட்டதும் அதிலிருந்து எவ்வாறு விடுபட்டார்கள் அதற்காக பயன்படுத்திய உத்திகள் போன்ற பலவும் அவர்களுக்கு உளக் கற்கையாக ஈமானோடு தொடர்புபடுத்தி வழங்கப்படுகின்றது. இங்கே நேர்மறையாகவோ அல்லது எதிர்மறையாகவோ நடத்தை மீழ்வலுவூட்டல் (Reinforcement) இடம்பெறுகின்றது (அருள்மொழி, 2017). இது இறை நெருக்கத்துடன் கூடிய ஆன்மீக இன்பத்திற்கு இட்டுச் செல்லக் கூடியது மற்றும் அல்லாஹ்வின் தண்டனை பற்றிய பயத்தையும், அவனுடன் தனித்திருந்து உரையாடும் இன்பம் பறிபோகுமோ என்ற அச்சத்தையும் ஏற்படுத்தக் கூடியது. இறை நினைவோடு அல்லாஹ்வுடன் தனித்திருக்கும் இன்பமானது அனைத்துலக இன்பங்களையும் விஞசக் கூடியது. அவ்வின்பம் இழக்கப்படும் வேதனைக்கும் அல்லாஹ்வின் ஈருலக தண்டனை பற்றிய அச்சத்திற்கும் முன்னால் வாழ்வில் ஏற்படும் அனைத்து உடல், உளத் துன்பங்களும் அற்பமாகிவிடும். அந்த ஆன்மீக இனபம் விசுவாசிகளை உயர்ந்த படிநிலைகளுக்கு இட்டுச் செல்லக் கூடியது என்ற உணர்வை சேவைநாடிகளின் மனதில் உண்டுபண்ணும் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

இதன் நீட்சியாக சேவைநாடி ஐவேளைத் தொழுகைக்கும் ஜமாஅத்தோடு தொழ அனுப்பப்படுகின்றார். 5 நேரமும் பள்ளிவாயலுக்குச் சென்று தொழுது பிரார்த்தனை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் இவர் பயிற்றுவிக்கப்படுகின்றார். இன்னும் சேவைநாடி பள்ளிவாசலுக்குச் சென்றுள்ளார் என்பதை ஒரு உறவினர் அல்லது நண்பரை அவருடன் நியமித்து அல்லது அவராகவே குறிப்புப் புத்தகத்தில் குறித்துக் காட்டுவதன் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளப்படுகின்றது. இப்படிச் செல்லும் போது இவரது சூழல் மாற்றமடைகின்றது. போதைப் பொருள் பற்றிய சிந்தனையோ அல்லது அதைத் தூண்டும் சூழலோ இல்லாததால் அவரது நடத்தை கொஞ்சம் கொஞ்சமாக போதையை விட்டும் தூரமாக்கப்படுகின்றது.

கிழமைக்கு ஒரு தடவை அல்லது தேவைக்கேற்ப ஆத்மீக ஈடுபாட்டினையும், ஈமானையும் பலப்படுத்தக் கூடிய வகையில் துறைசார் மார்க்க அறிஞர்களை நியமித்து உபதேசங்கள் வழங்குதல், நாட்களையும் வாழ்க்கையையும் திட்டமிடுதல் போன்றவற்றோடு இணைந்த

வழிகாட்டல்களை கொடுத்தல் போன்றனவும் இடம்பெறுகின்றன. இதன் போது ஆத்மீகத்திட்டமிடல் எதுவும் இல்லாமல் போதையோடு இணைந்திருந்நத சேவைநாடிகளுக்கு வாழ்வை சிறப்புறத் திட்டமிடுவதற்கான ஒரு தளம் ஏற்படுத்தப்படுகின்றது. அவ்வாறே மருத்துவ தலையீடுகள் தேவையாக உள்ள சேவைநாடிகளுக்கு அதற்கேற்ற வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றது.

**முடிவும் பரிந்துரைகளும்**

மேற்குலக ஐரோப்பிய, அமேரிக்க சிந்தனைகளால் தாக்கமுற்ற உளவளத்துணையாளர்களால் போதைப் பழக்கத்திற்கு உட்பட்டோரை மிகச்சரியாக தலையீடு செய்வது சாத்தியக் குறைவாக உள்ளது. அதனை இஸ்லாமிய உளவளத்துணையின் தலையீட்டைக் கொண்டு போதைக்கு அடிமையானவர்களின் ஆன்மாவிலும் உள்ளத்திலும் ஈமான் என்ற தூண்டற் காரணி ஏற்படுத்தும் தாக்கம் பற்றி அறிந்து வினைத்திறன் மிக்க நேரிய விளைவுகளை ஏற்படுத்த முடியும் என்பது தெளிவு.

பரிந்துரைகளாக பின்வருவனவற்றை முன்வைக்கலாம்,

- போதைப் பொருள் பாவனைக்குட்பட்டோருக்கு அதிலிருந்து வெளிவருவதற்கு எதவுவதில் இஸ்லாமும் இஸ்லாமிய உளவளத்துணையும் எவ்வாறு உதவுகின்றது என்பதை முஸ்லிம் உளவளத்துணையாளர்களுத்து தெளிவுபடுத்துதலும் லழிகாட்டுதலும்.
- இது தொடர்பான கற்கை நெறிகளை உருவாக்குவதில் கவனம் செலுத்துதல்.
- போதைப் பொருள் பாவனைக்கு இஸ்லாத்தின் அணுகுமுறைகள் மற்றும் உளவளத்துணை அணுகுமுறைகளுக்கு இடையிலான தொடர்புகள், ஒற்றுமை வேற்றுமைகள் தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- போதைப் பொருட்களின் பால் விழிப்புநிலை ஏற்படாத வண்ணம் அதிலிருந்து வெளிவர மக்களுக்கு உதவுதல்.

**உசாத்துணைகள்**

Arulmozhi, S. (2017). *கற்பித்தலுக்கான உளவியல்*. mountlavinia: Acadamic Institution of Postgraduate Studies.

Badri, M. (1981). *Hikmathul Islam fi Thahreemil Khamr, dhirasa nafsiyyah ijthimaaiyyah.* london: The International Institute of Islamic Thought.

Ritchie, H, Roser, M. (2019). Drug Use. pp. https://ourworldindata.org/drug-use.

Jeyasinghe, R. (2010). *உளவியல் சார் உளவளத்துணை அணுகுமுறைகள்*. colombo: Kumaran Book shop.

NDDCB, R. D. (2019). *Drug Related Statistic 2019.* National Dangerous Drugs Control Board.

Somasundaram, D, Sivayogam, S. (2014). *சீர்மிய உளவியல்*. Jaffna: Santhiham.


ISBN 978-624-5736-14-0